### அத்தியாயம் 5

# சகிப்புத்தன்மையும் ஒழுக்கமின்மையும்

1 கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபத்தின் முதல் நான்கு அதிகாரங்களில் சபையில் காணப்பட்ட பிரிவினைகளைக் குறித்த பவுலின் கரிசனையை குறித்து எழுதப்பட்டிருக்கிறது. கொரிந்து சபையில் காணப்பட்ட ஒரு சில சகோதரர்களின் அகந்தையே பிரிவினைக்கு காரணம் (4:19). ஒற்றுமை குறைவை விவாதித்த பின்னர், பவுல் அப்போஸ்தலன் மற்றொரு பிரச்சனையை குறிப்பிடுகிறார். இந்த சகோதரர்கள் அகந்தையோடு பவுலின் அதிகாரத்தை குறித்து கேள்வி எழுப்பினார்கள் (காண்க 4:18). இந்த பிரச்சனையை சமாளிக்க வேண்டிய அவசியம் பவுலுக்கு ஏற்பட்டது மற்றும் அவர் அதைச் செய்தார்.

இருப்பினும், பவுலின் அப்போஸ்தல அதிகாரத்தை குறித்த கேள்வி எழுப்ப காரணமாக அமைந்த சில சகோதரர்களின் அகந்தையே கிறிஸ்துவின் சரீரத்தைக் குறிக்கிற பரிசுத்தத்தை புறக்கணிப்பதற்கும் காரணமாக இருந்தது. தேவனை மையமாகக் கொண்ட நெறிமுறையானது எப்போதும் தேவனை சேவிப் பதற்கான அடிப்படையாக இருந்தாலும், அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியர்களுடன் நெறிமுறையைப் பற்றிய கலந்துரை யாடலில் ஈடுபடவில்லை. இருந்தபோதிலும், அப்போஸ்தலருடைய கவனத்திற்கு ஒரு தீவிரமான பிரச்சினை கொண்டு வரப்பட்டது. சபையில் தன்னை அடையாளம் காட்டிய ஒரு மனிதன், கொரிந்திய கிறிஸ்தவர்களுடன் முழு ஐக்கியத்தை பகிர்ந்துகொண்ட ஒருவன், அவனது தந்தையின் மனைவியுடன் ஒரு அப்பட்டமான ஒழுக்கநெறி உறவில் வாழ்ந்து கொண்டிருந்தான். இந்த அறிக்கையால் பவுல் வியப்படைந்தார்.

இந்த மனிதனின் நடத்தை மன்னிக்க முடியாதது, மனச்சாட்சியின் எந்த வேதனையுமின்றி இந்த பாவத்தை சகித்துக்கொண்டதை பவுலால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. இந்த விஷயத்தில் சபை முழுதும் தோல்வியுற்றது.

### பாவம் நீக்கப்படல் (5:1-5)

**1உங்களுக்குள்ளே விபசாரம் உண்டென்று பிரசித்தமாய்ச்**

**சொல்லப்படுகிறதே; ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக்கொண்டிருக்கிறானே; அது அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத விபசாரமாயிருக்கிறதே. [2]இப்படிப்பட்ட காரியஞ்செய்தவனை நீங்கள் உங்களைவிட்டு நீக்காமலும் துக்கப்படாமலும், இறுமாப்படைந்திருக்கிறீர்கள். [3]நான் சரீரத்தினாலே உங்களுக்குத் தூரமாயிருந்தும், ஆவியினாலே உங்களோடே கூட இருக்கிறவனாய், இப்படிச் செய்தவனைக் குறித்து நான் கூட இருக்கிறதுபோல, [4]நீங்களும், என்னுடைய ஆவியும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடிவந்திருக்கையில், [5]அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டு மென்று தீர்ப்புச்செய்கிறேன்.**

**வசனம் 1.** இப்பாவம் பற்றி ஒரு சாதாரண விவாதத்திற்குள் நுழைய பவுல் தயாராக இல்லை. அவருடைய வாசகர்களுக்கு அவர் அறிமுகமான விதம் ஒரு இடி மின்னல் போல் இருந்தது. **பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே** என்று சொல்லி தொடங்குகிறார். இரட்சகரும், மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் பெயரைச் சுமந்தவர்கள் ஒழுக்கக்கேட்டிற்கு ஒப்புதலை தருவது புறஜாதியாருக்குக் கூட வெட்கமாக இருந்திருக்கும். பவுல் ஒரு மனிதனுக்கோ, மனுஷிக்கோ, அல்லது ஒரு தம்பதியருக்கோ உரையாற்றவில்லை. அவருடைய ஏமாற்றம் சபையோடு இருந்தது. மாய்மாலமான ஞானத்தையும் புத்திசாலித்தனமான வாதங்களையும் பயன்படுத்தி, கிறிஸ்தவர்கள் இந்த விதமான வெட்கக்கேடான நடத்தையை சகித்திருப்பதாலே கிறிஸ்துவை எவ்வளவுக்கு குறை வாகவே அறிந்திருந்தார்கள் என்பதை அவர்கள் நிரூபித்தார்கள்.

அப்போஸ்தலனின் தீர்ப்பு பாவத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மனிதனையும் அதை சகித்துக் கொண்டிருந்த சபையையும் சார்ந்து எடுக்கப்பட்டது. அந்த பெண்ணைப்பற்றி அவர் ஏதும் சொல்லவில்லை. அவள் இப்பாவத்திற்கு கட்டாயப் படுத்தப்பட்டிருக்கலாம், அல்லது அவள் ஒரு அவிசுவாசியாக இருந்திருக்கலாம். ஆனால், அந்த மனிதர் ஒரு கிறிஸ்தவர், புறஜாதிகளிடத்திலும் கூட காணப்படாத பாவத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார். பவுல் தனது முக்கிய அக்கரையை வெளிப் படுத்துகையில், இப்பாவத்தை குறித்து கண்டுகொள்ளாதபடி தங்கள் தலையை திருப்பிக் கொண்டிருந்த சபை அங்கத்தினர்களிடத்தில் பவுல் தன்னுடைய வார்த்தைகளை திருப்புகிறார்.

மோசேயின் நியாயப்பிரமாணத்தில் முறையற்ற புணர்ச்சி குறித்து வரையறுக்கப்பட்டுள்ளது (லேவி. 18:8; 20:11; உபா. 22:30; 27:20). கிரேக்கச் சமுதாயம் சில சமயங்களில் முறையற்ற புணர்ச்சியை

கவர்ச்சியாக காட்டியது, ஆனால் பொதுவாக அது ஏளனமாக எண்ணப்பட்டது. கிரேக்க கலாச்சாரத்தில் முறையற்ற புணர்ச்சி ஏற்றுக் கொள்ளப்பட்டது என்ற கருத்திற்குத் தேவையான ஆதாரங்கள் எதுவும் இல்லை. இருப்பினும், புறஜாதியார்களின் ஒழுக்க நெறியின் தளர்வான தரங்களுக்கிடையில், இம்மனிதன் தன் தந்தையின் மனைவியுடன் வைத்திருந்த தவறான உறவை சகித்ததினால் சபை தனது நற்பெயரைக் கெடுத்தது.

இப்பாவத்தைக்குறித்து அநேகமாய் பவுல் குலோ வேயாளிடமிருந்தோ (1:11) அல்லது 16:17 இல் குறிப்பிடப்பட்ட ஒரு குழுவினரிடமிருந்தோ கேள்விப்பட்டிருக்கலாம். பவுலின் பதிலில் உள்ள வார்த்தைகள் அவருடைய அவநம்பிக்கையையும் மற்றும் ஏமாற்றத்தையும் காட்டுகிறது. “நான் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகைய அப்பட்டமான ஒழுக்கக்கேட்டில் அவர்கள் ஈடுபட்டுள்ளதை என்னால் நம்ப முடியவில்லை” என்று அவர் எழுதியபோது அவரது எண்ணத்தில் எப்படிப்பட்ட கற்பனைகள் ஓடியிருக்கும் என்று ஒருவர் யூகிக்கமுடியும். நான் “பிரம்போடு” (4:21) வரவேண்டுமா என்று பவுல் கரிசனைப் படுகிறார். உண்மையில், “நான் ஏன் அப்படிப்பட்ட கடுமையான மொழிநடையைப் பயன் படுத்தினேன் என்று ஆச்சரியப் படுகிறீர்களா? நான் ஏன் ஒரு பிரம்போடு வர வேண்டும் என்று எண்ணினேன்? உங்களிடையே நடந்து வரும் சில காரியங்களை நான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். கிறிஸ்துவின் சரீரம் ஒழுக்கக்கேட்டினால் அதனுடைய பரிசுத்தத்தை இழந்து விட்டது - இன்னும் மோசமானது என்னவெனில் சபை அதை மிகவும் லேசாக எடுத்துக் கொண்டது!”

தன்னுடைய **தந்தையின் மனைவி** என்று பவுல் யாரை குறிப்பிடுகிறார் என்பது தெளிவாக தெரியவில்லை. அந்த மனிதனின் பெற்றெடுத்தத் தாயாக இருந்திருந்தால் பவுல் அதை நிச்சயம் குறிப்பிட்டிருப்பார். “தாயுடன் அல்ல சித்தியோடு முறையற்ற உறவுகொண்டிருக்கும் மனிதனைக் குறித்து தான் பவுல் குறிப்பிட்டிருக்கவேண்டும்.”[1] அம்மனிதனின் பெற்றெடுத்தத் தாய், அதாவது தன் தகப்பனின் முதல் மனைவி, இறந்து போயிருக் கலாம். ஒருவேளை அவன் தகப்பன் தன் இளவயது மகனின் வயதுக்கொத்த ஒரு இளம் பெண்ணை மறுமணம் செய்து கொண்டிருக்கலாம். மகன் தன் தந்தையின் வீட்டில் வசிக்கிறானா? அவன் தன் தந்தையின் மனைவியை மயக்கி, திருமணத்தை உடைத்திருந்தானா? அந்த மனிதனின் தந்தை இறந்து விட்டாரா? சில உணர்ச்சி கொந்தளிப்பு ஏற்பட்டு இந்த ஒழுக்கக்கேட்டிற்கு ஆரம்பமாயிற்றா?

இறுதியில், விவகாரத்தின் விவரங்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன; அது துன்மார்க்கமானது மற்றும் மன்னிக்க முடியாதது. ஒரு வேளை புறஜாதிகளிடம் அத்தகைய நடத்தையை

ஒருவர் எதிர்பார்க்கலாம், ஆனால் சபை தேவனுடைய பெயரை தரித்திருக்கும் பரிசுத்த ஜனமாகும்.

தன் தகப்பனுடைய மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதனை பவுல் πόρνος (*pornos*, "விபச்சாரக்காரன்") என்று அழைக்கிறார். πόρνη (*pornē*) என்பது விலைமகளை குறிக்கும். πορνεία (*porneia*) என்னும் கிரேக்கப்பெயர்ச்சொல் விலைமகளின் தொழிலை குறிக்கிறது. புதிய ஏற்பாட்டில், அந்த வார்த்தை அனைத்து வகையான பாலியல் முறை கேட்டை "விபச்சாரத்தை" குறிப்பிடும் பொதுவான வார்த்தையாக பயன்படுத்தப்படுகிறது. ஹெலனிஸ்டிக் யூத அறநெறிஞர்கள் பயன் படுத்திய *porneia* என்ற வார்த்தையே புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களும் பயன் படுத்தினர். திருமணத்திற்கு வெளியே கொண்டிருக்கும் எல்லா வித பாலியல் முறைகேடுகளையும் குறிப்பிட இந்த வார்த்தைகளைப் பயன் படுத்தினார்கள். முறையற்ற புணர்ச்சி, விபச்சாரம், ஓரினச் சேர்க்கை ஆகியவற்றை உள்ளடக்கும் வார்த்தை இது.[2]

புதிய ஏற்பாடு உண்மையான நிகழ்வுகள் மற்றும் அனுபவங்களின் சூழலில்தான் நெறிமுறைகளை விவாதிக்கிறது. நன்னெறி கோரிக்கைகளை உள்ளடக்கியது தான் விசுவாசம் என்பதை கண்டுபிடிக்கும் தொடர்நிகழ்வில் சபை ஈடுபட்டிருக்கிறது. கிறிஸ்தவர்கள் சந்திக்க இருக்கும் நல்ல மற்றும் தீய ஒழுக்க நெறிகளை முறையாக பட்டியலிட பவுல் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அதற்கு பதிலாக, பவுலும் மற்ற புதியஏற்பாட்டு ஆசிரியர்களும் பாவத்திற்குட்பட்ட மக்களுடனான தங்கள் தொடர்பு மூலம் அறநெறியை கற்றுக்கொடுத்தனர். சில நேரங்களில் அவர்கள் பொறுமையாகவும் கெஞ்சியும், மற்ற நேரங்களில் அவர்கள் மிகவும் கட்டாயமாகவும் எதிர்த்தனர். அவர்கள் பாவத்தை சந்தித்த வேளைகளில் அதனை கவனமாக கையாண்டனர்.

தந்தையின் மனைவியுடன் பாவத்தில் வாழ்ந்தவரின் வழக்கில், கொரிந்துவிலுள்ள சபை தேவனுடைய நெறிமுறை கோரிக் கைகளை நிறைவேற்ற தவறிவிட்டது. சபையின் தோல்விகள் இன்றும் இதே போன்ற முறையை பின்பற்றுகின்றன. சபையின் ஒழுக்கநெறி உலகம் முழுவதற்கும் முன்னுதாரணமாக இருக்கவேண்டும். கிறிஸ்தவர்கள் தார்மீக மாதிரி வாழ்வை வாழ்ந்துகாட்ட தவறினால் கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கத்திற்கு ஆர்வமுடன் செவிகொடுக்கமாட்டார்கள். கிறிஸ்தவ வாழ்க்கை முறைகளும் கொள்கைகளும் பிரிக்கமுடியாத ஒன்றாக பிணைக்கப்பட்டுள்ளன. கிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக அறிக்கையிடும் விசுவாசத்தினால் தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழமுடியும்.

**வசனம் 2.** இந்த சூழ்நிலையை பவுலால் நம்பவே முடியவில்லை. அத்தகைய வெட்கக்கேடான நடத்தையை அவர்கள் எப்படி

நியாயப்படுத்த முடியும்? அவர்கள் தங்களை ஞானமுள்ளவர்கள் என்று எண்ணினாலும், வெளிப்படையான ஒழுக்கக்கேட்டைப் பார்த்து சிறிதேனும் கண்சிமிட்டவில்லையா? அவர்கள் அகந்தையினாலும் (πεφυσιωμένοι, *pephusiōmenoi*; 5:2) "பெருமையினாலும்" (KJV) நிறைந்திருந்தார்களா? மாறாக இந்தத் தேவபக்தியில்லாத நிலையைக் குறித்து அவர்கள் **துக்கப்பட்டிருக்க** வேண்டுமே. ஒரு சக விசுவாசியின் ஒழுக்கக்கேட்டைக் கண்டு அவர்கள் வெட்கத்தினால் நிறைந்திருக்க வேண்டுமே. இந்தச் செயலைச் செய்தவரை அவர்கள் தங்கள் மத்தியிலிருந்து அகற்றியிருக்க வேண்டுமே.

இந்த ஒழுக்கங்கெட்ட சகோதரனை சபை சரியான முறையில் கையாண்டிருந்தால் சபைக்கு தேவன் அருளிய ஞானம் வெளிப் பட்டிருக்குமே (1:30). தெய்வத்தின் உயர்ந்த குறிக்கோளாகிய ஒழுக்கத்தை மக்கள் பின்பற்றுவதின் விளைவாக ஞானமுடையவர் களாகிறார்கள். கொரிந்து கிறிஸ்துவர்கள் தங்களைச் சுற்றியிருந்த புறமத சமுதாயத்தில் ஒழுங்காக வாழ்ந்த மக்களின் தராதரங்களைக்கூட பின்பற்றி வாழவில்லை. இந்த சூழ்நிலையில், பிரிவினையையும் இந்த மனிதனை ஏற்றுக்கொள்ளுதலையும் விளைவித்த அகந்தைக்கு பதிலாக துக்கமும் நொறுங்குதலும் ஏற்பட்டிருந்தால் அதுவே சரியானதாக இருந்திருக்கும். அவர்கள் சரியான வகையில் வருத்தமடைந்திருந்தால், கிறிஸ்தவ சமுதாயம் அத்தகைய நடத்தையை ஏற்றுக் கொண்டிருக்காது. பாவம் செய்த மனிதனை அவர்கள் நடுவில் இருந்து அகற்றியிருக்க வேண்டும்.

**வசனம் 3.** கொரிந்து சபைக்கு உதவி செய்ய பவுல் ஒரு தனிப்பட்ட விஜயத்தை மேற்கொள்ள தடை செய்யப் பட்டிருந்தாலும், அவர் அவர்களோடு ஆவியில் இருந்தார். **சரீரத்தினாலே தூரமாயிருந்தாலும் ஆவியினால் கூட இருந்தார்** என்பதை பல வழிகளில் புரிந்து கொள்ளலாம். சபைக்கு அவர் கொடுத்துக் கொண்டிருந்த எச்சரிப்புகள் அவருடைய தனிப்பட்ட முறையில் அவர்களோடிருப்பதற்கும் கருத்துக்களுக்கும் மாற்றானது என்று அவர் பொருள்கொண்டிருக்கலாமா? ஒரு வேளை, ஆனால் வார்த்தைகள் பெரும்பாலும் அதிக எடை கொண்ட தாக்கங்களைக் கொண்டிருக்கலாம்.

வசனம் 5:2ல் சொல்லப்பட்டிருக்கும் அழுத்தச் சொல்லான "நீ" (ὑμεῖς, *humeis*) ஐ வேறுபடுத்தி 5:3ல் சொல்லப்பட்டிருக்கும் "நான்" (ἐγώ, *egō*) என்னும் அழுத்தச் சொல்லானது இந்த விஷயத்தில் தீர்ப் பளிப்பதற்காக அப்போஸ்தலன் உடல் ரீதியாக அவர்களோடு இருக்க வேண்டிய அவசியமில்லை என்பதை தெரிவிக்கிறார். இருதயத்திலும் மனதளவிலும் பவுல் அவர்களோடு கொரிந்துவில் இருக்கிறார். அவர்களுடைய கூட்டங்களில் பவுல் ஒரு மறைவான விருந்தாளியாக இருந்தார். அப்போஸ்தலனாகிய பவுல் அவர்கள் மத்தியில்

தங்கியிருப்பதைப் போல, **இப்படிச் செய்தவனை** ஏற்கனவே நியாயந்தீர்ப்பதாக சொன்னார். விசுவாச வாழ்க்கை என்பது ஒழுக்கமுடனும் கீழ்ப்படிதலுடனும் என்று கிறிஸ்துவின் அப்போஸ்தலனான பவுல் வெளிப்படுத்தினார்.

**வசனம் 4.** 5:4ல் **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தோடே** என்ற சொற்றொடரை மொழிபெயர்ப்பது சற்று கடினமானது. NRSV வசனம் 4ஐ 3ம் வசனத்தோடு இணைத்து பின் வருமாறு தருகிறது: "அத்தகைய காரியத்தில் ஈடுபட்ட மனிதனைக் குறித்து இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நான் ஏற்கனவே தீர்ப்பை சொன்னேன்" என்றார். NIV இந்த சொற்றொடரை சபைகூடி வருதலோடு இணைத்து பின்வருமாறு மொழி பெயர்க்கிறது: "நீங்கள் கூடி வருகிறபோது ... கர்த்தராகிய இயேசுவின் வல்லமை பிரசன்னமாயிருக்கிறது." குற்றவாளியை சாத்தானுக்குக் ஒப்புக் கொடுக்கவேண்டும் என்ற பவுலின் தீர்மானத்தை இந்த சொற்றொடர் தெளிவுபடுத்துகிறது என்று NASB மொழிபெயர்ப்பு குறிப்பிடுகிறது. நீங்கள் கூடிவந்த போது, "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே" என்று அது சொல்லுகிறபோது சிறிய வேறுபாடுகளே, ஆனால் அவர் ஏற்கெனவே குற்றவாளியை நியாயந்தீர்த்தார் (5:3) என்பதை உறுதிப்படுத்துகிறது என்ற கருத்தை NRSV மொழி பெயர்ப்பு வலியுறுத்துகிறது.

**நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் அதிகாரத்தோடே** என்று சொற்றொடரை மாற்றியமைப்பதினால் ஒரு கேள்வி எழுகிறது. "நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் அதிகாரத்தோடே" என்னும் சொற்றொடர் பவுல் ஆவியில் பிரசன்னமாக இருப்பதை குறிக்கிறதா அல்லது பாவத்தில் வாழும் மனிதனை சாத்தானிடம் ஒப்படைக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறதா? இந்த கேள்விகள், பெரும்பாலாக நுட்பமானது; ஆனால் இந்த வசனமும் அதைத் தொடர்ந்த வசனங்களும் தெளிவாக உள்ளது. அப்போஸ்தலனாகிய பவுலின் அதிகாரம், இயேசுவின் நாமத்துடன் சேர்ந்து, இயேசுவின் சரீரமாகிய சபையில் அத்தகைய ஒழுக்கக்கேடானதை சகிக்க முடியாதது என்று அறிவித்தார்.

**வசனம் 5.** இங்கும், 1 தீமோத்தேயு. 1:20ல் (ஹீம் மேஸ் மற்றும் அலெக்ஸாண்டர் ஆகியோரைப் பற்றி பேசுகையில்) மட்டுமே அத்தகைய ஒருவரை **சாத்தானுக்குக் ஒப்புக்கொடுக்கும்படி** சபையைப் பவுல் அறிவுறுத்தினார். தேவனுடைய மக்களால் ஆன சபையின் ஐக்கியத்திலிருந்து குற்றவாளி பிரிக்கப்பட வேண்டுமென பவுல் தெளிவாகக் குறிப்பிடுகிறார். சபை என்பது மக்களின் நம்பிக்கையிலும் நடத்தையிலும் கிறிஸ்து தனது செல்வாக்கை செலுத்துகின்ற இடமாகும். சாத்தானின் ஆட்சி கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு வெளியே உள்ள உலகத்தில் மட்டுமே.

சாத்தானிடம் ஒப்புக்கொடுப்பதினால் சரீரத்தின் **அழிவு** நிகழ்வது எப்படி? சாத்தானுக்கு ஒப்புக் கொடுப்பதின் மூலமாக அம்மனிதன் தேவனுடைய ஒழுக்கநெறி பெறக்கூடும் என்று பவுல் எதிர் பார்த்தது நம்புவதற்கு கடினமாக உள்ளது. **கர்த்தராகிய இயேசுவின்** வருகையில் அவர் அம்மனிதனை காப்பாற்றும்படி சாத்தான் அம்மனிதனை வடிவமைப்பான் என்று பவுல் நிச்சயமாக சொல்லியிருக்க வாய்ப்பில்லை. தேவ மக்களோடு ஒரு தளர்வான கூட்டுறவு வைத்திருந்தால், அது பாவம் செய்யத் தூண்டும், இதனால் ஏற்படும் அழிவுகரமான விளைவுகள் வெளிப்படை தெரிவது இல்லை என்பதை அநேகமாய் பவுல் குறிப் பிட்டிருக்கலாம். ஒருவன் சாத்தானுக்கு ஒப்படைக்கப்படும்போது, சபையோடு அவனுக்குள்ள ஐக்கியம் துண்டிக்கப்படும்போது, அதனால் அவன் தன் பாவங்களை நேரடியாக சந்திக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகிறான். இவ்விதமாக, இத்தகைய ஒருவரை சாத்தானிடத்தில் ஒப்படைப்பதனால், இரட்சிப்பின் நோக்கத்தை அடையலாம். அம்மனிதன் தன்னுடைய பாவத்தின் இருளைக் கண்டபோது, அவனுடைய இழிவான நடத்தைக்கு காரணமாக வேரூன்றியிருந்த மாம்ச இச்சைகளை அவன் அழித்திருக்கக்கூடும். பாவம் துன்பங்களை உருவாக்குகிறது, பாவத்தினால் உண்டாகும் விரும்பத்தகாத விளைவுகள் ஒருவனை மனந்திருந்துதலின் உணர்வுக்கு கொண்டு வர முடியும் (லூக். 15:17).

மாம்சத்தின் அழிவு உண்மையான உடல் ரீதியான விளைவுகளை குறிக்கிறது என்று சிலர் கருதுகின்றனர் (உதாரணமாக, அப். 5:1-11ல் அனனியா, சப்பீராளின் சம்பவம் மற்றும் அப். 13:8, 11ல் எலிமா). அப்படியானால், உடல் நோய் மற்றும் பாவம் ஆகிய இரண்டும் எப்பொழுதும் நேரடியாகவே சம்பந்தப்பட்டிருக்கும் எனில் வேதபோதனையோடு சமரசம் செய்வது கடினமானது (உதாரணமாக, யோவான் 9:3). இது மிகவும் தெளிவாக இருக்கிறது: சபை ஒழுங்கு முறை என்பது நேர்மையான கோபத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக மட்டுமல்ல, நியாயத்தீர்ப்பு நாளில் தேவனுக்கென்று பாவியின் ஆத்துமாவை ஆதாயப்படுத்திக் கொள்வதற்கான நோக்கம் ஆகும்.

## சபையை சுத்திகரித்தல் (5:6-8)

சபை விரைவாகவும், உறுதியாகவும் செயல்பட வேண்டியது கட்டாயமான ஒன்று. கிறிஸ்துவின் பிராயச்சித்தப்பணியை விளக்குவதற்கு பஸ்காவை ஒரு உதாரணமாக பவுல் அப்போஸ்தலன் பயன் படுத்துகிறார். பாவத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மனிதனைக் கண்டிப்பதற்காக சபையை பவுல் வலி யுறுத்தினார். கிறிஸ்துவாலே சுத்திகரிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள், தேவன் அவர்களை எதற்காக படைத்தாரோ அந்த நோக்கத்திற்காக வாழவேண்டும். கிறிஸ்துவுடைய

சபையின் பரிசுத்தம் அவருடைய நாமத்தை அணிந்திருக்கிற மக்களுடைய தேவ பக்தியுள்ள வாழ்க்கையில் பிரதிபலிக்க வேண்டும்.

**6நீங்கள் மேன்மைபாராட்டுகிறது நல்லதல்ல; கொஞ்சம் புளித்தமா பிசைந்தமா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா?**
**7ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதி தாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப் போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. 8ஆதலால் பழைய புளித்த மாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக் கடவோம்.**

**வசனம் 6.** மனந்திரும்புதல் மனத்தாழ்மைக்கு ஒரு முன்நிபந்தனை. கொரிந்தியர்களின் பெருமை பவுலைப் பற்றிய புகார்களுக்கும் பிரிவினைக்கும் காரணமாக இருந்தது. வெட்கத்தினால் தலை குனிய வேண்டிய இந்தச் சகோதரர்கள் பெருமையினால் தங்கள் தலைகளை உயர்த்தியிருந்தனர். அகந்தை, அவமானம், பெருமை, மற்றும் மனத்தாழ்மை ஆகிய அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையவைகள். பவுல் தன்னுடைய நியாயத்தீர்ப்பை தெளிவாக எடுத்துரைத்தார்: **நீங்கள் மேன்மை பாராட்டுகிறது நல்லதல்ல.** ஒருவன் தன்னுடைய தந்தையின் மனைவியுடன் பாவத்தில் வாழ்ந்துகொண்டிருந்ததை சபை சகித்திருப்பது சபையை பாதித்த பெருமைக்கும் அகந்தைக்குமான அறிகுறி (1:29; 3:21; 4:6, 18; 5:2; 8:1). மேன்மைபாராட்டுதல் தற்பரிசோதனைக்கு இடையூறானது மற்றும் மனத்தாழ்மை மனந்திரும்புதலுக்கு அவசியமானது. மேன்மை பாராட்டுதல் சபையை உலகத்தோடு ஒன்று படுத்துகிறது; அது கிறிஸ்துவின் நாமத்தை கனவீனப்படுத்துகிறது. மேலும் அது விசுவாசி களிடத்திலிருந்து கர்த்தருடைய ஆசீர்வாதங்களை துண்டித்து விடுகிறது.

பவுல் தன்னுடைய குறிப்பை வலியுறுத்த சமைய லறையிலிருந்து ஒரு ஒப்புமையை பயன் படுத்துகிறார். **கொஞ்சம் புளித்தமா பிசைந்தமா முழுவதையும்** அமைதியாகவும் விரைவாகவும் புளிப்பாக்குகிறது. இயேசு புளிப்பைப் பற்றி ஒரு நேர்மறையான கருத்தை சொன்னார்: பரலோக ராஜ்யம் புளித்த மாவைப் போல உலகத்தை ஊடுருவி இருந்தது (மத். 13:33); ஆனால் தீமையும் கூட, புளிப்பைப் போல பரவுகிறது. பரிசுத்த வாழ்வுக்காக கிறிஸ்து தம்முடைய மக்களுக்கு அளித்திருக்கிற ஆதாரங்கள் மறைவான பாவத்தை தாக்கத் தயாராக இருக்கிறது. உண்மையான கிறிஸ்தவர்களின் கூட்டத்தில், போராடும் சீஷர்கள் ஆதரவைக் கண்டடைகிறார்கள், தீமையை எதிர்த்து நிற்கிறார்கள். சபையில் திறந்த வாசலை பாவம் காண்கிறபோது,

தீர்மானம் பலவீனப்படுகிறது; பின்னர் அவபக்தி பரவுகிறது. சபையின் அங்கத்தினர்கள் தங்களை ஒருவரோடொருவர் நெருக்கமாக இணைக்கப்பட்டிருப்பதை காண்கிறார்கள். ஒருவரும் தன்னுடைய பாவத்தை என்னுடைய சொந்தகாரியம் என்று சொல்ல முடியாது. கிறிஸ்துவின் நாமத்தை அணிந்து கொண்டிருக்கும் அனைவரும், ஒரு விதத்தில், அவருடைய சகோதரரின் காவலாளியே (காண்க ஆதி. 4:9). கொஞ்சம் புளித்தமா முழுவதும் பிசைந்த மாவை புளிப்பாக்குகிறதுபோல ஒருவருடைய பாவம் சரீரமாகிய சபை முழுவதையும் பாதிக்கிறது.

கொரிந்துவிலுள்ள முன்னேற்றங்கள் அப்போஸ்தலரை சோர்வடையச் செய்திருந்தாலும், அவர் மக்களுடைய தவறுகளை சுட்டிக்காட்டி, மனந்திரும்புதலுக்காக அழைப்பு விடுத்தார். தேவனுடைய ராஜ்ஜியத்தின் ஊழியக்காரர்கள் மக்கள் தங்களை தவறாக புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்றோ அல்லது அவர்கள் கிறிஸ்துவின் கோரிக்கைகளை புறக்கணித்து விடுகிறார்கள் என்றோ சோர்ந்து போக வேண்டாம். இயேசு மற்றும் யோவான் ஸ்நானன் போல, பவுல் ஒருபோதும் பாவத்திற்கு உடன் படவில்லை. மக்கள் ஒழுக்கக்கேட்டில் குற்றவாளியாக்கப்பட்ட போதும் அல்லது தவறான கோட்பாட்டைக் கடைப்பிடித்த போதும் பவுல் அவர்களை புறக்கணித்து விடவில்லை. ஒரு கிறிஸ்தவனாக இருப்பது என்பது கூடுமானவரையில் கிறிஸ்தவ விசுவாசத்தை செயலில் காட்டுவது ஆகும். (Francis Schaeffer) பிரான்சிஸ் ஸ்காஃபர் என்பவர் பின் வருமாறு எழுதினார்,

> பல அற்புதமான விஷயங்கள் அழிக்கப்பட்டு விட்டன என்பதில் உறுதியான கருத்துடையவன் நான். ஏனெனில் பழுதற்றது எது என்பதை குறித்து மக்கள் தங்கள் மனதில் ஒரு முன்னோட்டமான எண்ணங்களும் வயப்படுத்தும் கருத்தையும் கொண்டிருந்தனர். ஆகவே உண்மையான பழுதற்ற பரிசுத்த நிலையை சுக்கு நூறாக்கினர்.[3]

**வசனம் 7.** தகப்பனுடைய மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருந்த அந்த மனிதன் கொரிந்து சபையிலிருந்து சுத்திகரிக்கப்பட வேண்டிய பாவத்தின் பழைய புளிப்பு. சபை தூய்மைப் படுத்தப்பட்டு, புதிதாக்கப்பட வேண்டும் என்பது கிறிஸ்துவுடன் இசைவாகுதலுக்கு மிகவும் அவசியமாக்கப்பட்டது. கிறிஸ்து எந்த நோக்கத்தோடு சபையை உருவாக்கினாரோ அதை விசுவாசிகள் நிறைவேற்ற பரிசுத்த ஜாதியாக, மாம்சத்தின் ஆளுகையை மேற் கொண்டு வாழவேண்டும் என்று பவுல் வலி யுறுத்தினார். தேவனை கனம் பண்ணும் படியாக ஒரு பரிசுத்த ஜாதியை உண்டாக்க **கிறிஸ்து நமக்காக பஸ்காவாக பலியிடப்பட்டிருக்கிறார்.**

7 வது வசனத்தில் "ஆட்டுக்குட்டி" என்ற வார்த்தை NASB என்னும்

மொழிபெயர்ப்பில் சொல்லப்படவில்லை, ஆனால் பவுல் இயேசுவை “நம்முடைய பஸ்கா” என்று அழைத்தார், மேலும் அவர் “பலியிடப்பட்டார்” என்ற குறிப்பையும் சேர்த்துக் கூறினார். பஸ்கா பண்டிகையை முன்னிட்டு பலியிடப்படும் ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை குறிப்பிடுகிறார் பவுல் அப்போஸ்தலன். நுட்ப ரீதியாக, பஸ்கா பலி என்பது ஒரு வயது நிரம்பிய ஆட்டுக்குட்டியாகவோ அல்லது வளர்ந்த ஆடாகவோ இருக்கலாம் (யாத். 12:5), ஆனால் அது சாதாரணமாக ஒரு ஆட்டுக்குட்டி எனலாம். பஸ்கா ஆட்டுக்குட்டியாக கிறிஸ்துவை சித்தரிப்பது வெவ்வேறு விதமான இரண்டு பார்வைகளை அளிக் கிறது. முதலாவது, *தீங்கு செய்யாத அப்பாவித்தனத்தைக்* குறிக்கிறது. எனினும், இயேசு ஒரு பஸ்காபலி என்னும் கருத்து அவரது அப்பாவித்தனத்தை மட்டுமே அழுத்தமாக குறிப்பிடுகிறது என்று சொல்ல முடியாது. ஏனெனில், அதன் இரண்டாவது பார்வையே அதிகமாக வலியுறுத்தப்பட வேண்டியது. அதாவது, *பாவங்களுக்காக பாவநிவாரண பலியாக அடிக்கப்பட்டதை குறிக்கிறது*, அல்லது பாவத்திற்கு எதிரான தேவ கோபத்தை அவர் நிவிர்த்தி செய்ததைக் குறிப்பிடுகிறது. இந்தப்பார்வை, “சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவகள் ” மேல் தேவன் கொண்டுவரும் நீதியுள்ள ஆக்கினையாகிய நியாயத்தீர்ப்பை நினை விற்கு கொண்டு வருகிறது (2 தெச. 1:8). யோவானும் பேதுருவும் இயேசுவை ஒரு “ஆட்டுக்குட்டி” (யோவான் 1:29, 36; வெளி. 5:6; காண்க 1 பேதுரு 1:19) உருவகமாக குறிப்பிட்டாலும் நேரடியாக அவரை பஸ்கா ஆட்டுக்குட்டியாக்கவில்லை. பின்னர், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இயேசுவை பஸ்கா பலி என்று குறிப்பிடுவது தவறானதாகிவிடும்.

இந்த வேதபகுதியில், யோவான் 19:36 மற்றும் யாத்திராகமம் 12:46ல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது போல, உண்மையில் கர்த்தரே பஸ்கா ஆட்டுக்குட்டியாக எண்ணப்பட்டுள்ளார். மேலும் NIV மற்றும் NRSV போன்ற இரண்டு மொழி பெயர்ப்புகளும் 5:7ல் ஆட்டுக்குட்டி என்றே சரியாக குறிப்பிடுகிறது.

**வசனம் 8.** அப்போஸ்தலன் பஸ்கா பண்டிகையை குறிப்பிடுகிறார். இந்த விருந்து மகிழ்ச்சி மற்றும் கொண்டாட்டத்தின் காலம், யூத மக்கள் ஒரு திரளான ஜாதியாக உருவானதை பிரதிபலிக்கும் காலம். பவுலின் முதல் வாசகர்கள் இங்கே ஒரு தீவிர வேறுபாட்டை உணர்ந்திருப்பார்கள்: இந்த பண்டிகை காலத்தில் விசுவாசிகளின் நட்பு உணர்வு என்பது புறஜாதிகளின் பழங்கால பண்டிகைகளான தியோனிஸஸ் அல்லது சைபீயை கௌரவிக்கும் சுய இழிவான துன்மார்க்கத்தைப் போன்றதே அல்லாமல் வேறொன்றும் இல்லை. இதேவிதமான வேறுபாடு இன்றைய உலகிலும் வெளிப்படையாக காணப் படுகிறது, சக கிறிஸ்தவர்களின் ஐக்கிய விருந்துடன் ஒரு

வினோதமான சடலத்தின் பின்னணியில் இருக்கும் பெரும் அமளியோடு ஒப்பிடும் போது, பண்டிகையை கொண்டாடுவது என்பது, சபை கூடுகையில், அதன் வழிபாடு மற்றும் அதன் வாழ்வில் சபை பங்கேற்பதாகும். கொண்டாட்டத்தின் அடிப்படை என்பது சபையின் ஒருமைப்பாடு, பொதுவான விசுவாச அறிக்கை, பரிசுத்தத்திற்கான அர்ப்பணிப்பு, நம்பிக்கை, மற்றும் ஐக்கியம் போன்றவைகளாகும்.

பஸ்கா பண்டிகை காலத்தின் புளிப்பில்லாத அப்பம் கிறிஸ்தவ மற்றும் புறஜாதி கொண்டாட்டங்களிடையே உள்ள வேறுபாட்டை உயர்த்தி காட்டுகிறது. புளிப்பில்லாத **அப்பமாகிய துப்புரவு** மற்றும் உண்மையின் முழுமையில் **துர்க்குணமும் பொல்லாப்பும்** இரண்டறக்கலப்பதை **புளிப்பு** உருவகப்படுத்துகிறது. தந்தையின் மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருந்த மனிதனை துர்க்குணமும் பொல்லாப்புமான வாழ்விலும் பொருத்த முடியாது, புதிய வாழ்வின் புளிப்பில்லாத வழிகளில் அவைகளை குறித்து சிந்திப்பது என்பது கூடாத காரியம். “புளிப்பின்” ஆபத்து மற்றும் “விருந்து கொண்டாடுதல்” என்ற யோசனை கூடியிருந்த சபைக்கு பொருத்தமானது. கிறிஸ்தவர்களை ஒரு சமுதாயமாக தாங்கிப் பிடித்து நிறுத்துவது வழக்கமான சபைகூடி வருதல் ஆகும். இப்படிப்பட்ட வேளைகளை பவுல் பின்வரும் சொற்றொடர்களில் குறிப்பிடுகிறார்; “நீங்கள் கூடிவந்திருக்கையில்” (5:4), “நீங்கள் சபை யிலே கூடிவந்திருக்கும் போது” (11:18), மற்றும் “சபையாரெல்லாம் ஏகமாய் கூடி வரும்போது” (14:23).

“புளிப்பில்லாத அப்பமாகிய துப்புரவு மற்றும் உண்மை” மற்றும் சபையின் “விருந்தை” கொண்டாடுதலும் சேர்ந்து பவுலும் அவருடைய வாசகர்களும் கர்த்தருடைய பந்தியை மனதில் கொண்டு வந்திருக்கக்கூடும். புறமத விழாக்களில் கடைப் பிடிக்கப்பட்ட சில பழக்கவழக்கங்களைக் கொண்ட “விருந்து” உடன் தேவ பக்தியுள்ள வாழ்க்கை முறையை வேறுபடுத்திக் காட்ட வேண்டுமென்று அப்போஸ்தலன் எதிர்பார்த்திருக்கலாம். பழங் காலத்து நூலாசிரியர்கள் கடவுளை[4] கௌரவிப்பதற்கான திருவிழாக்களுடன் தொடர்புள்ள தீயபழக்கங்களைப்பற்றி எழுதினார்கள். “நமது விருந்து” மற்றும் “அவர்கள் விருந்துகள்” ஆகியவற்றிற்கு இடையே உள்ள வேறுபாடு பவுல் தன்னுடைய சகோதரர்களுக்கு கிறிஸ்துவின் விருந்து அவரது பின்பற்றும் அழைப்பை தந்தது என்று விளக்குவதற்கு மிகவும் உதவியாக இருந்தது. கர்த்தருடைய பந்தியில் புளிப்பில்லாத அப்பத்தை பயன்படுத்துவது பற்றி இந்த வேத பகுதியில் மறைமுகமாக குறிப் பிடப்பட்டுள்ளது. ஆனால் கர்த்தருடைய பந்தியில் புளிப்பில்லாத அப்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது பற்றி புதிய ஏற்பாட்டில் எங்கும் நேரடியாக சொல்லப்படவில்லை. எனினும், யூதர்கள் புளிப்பில்லாத

அப்பத்தை மட்டுமே பயன்படுத்திய பஸ்கா காலத்தின் போது தான் இயேசு கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்தினார் (யாத். 12:8).

## விளக்கமளிக்கும் கட்டளைகள் (5:9-13)

தந்தையின் மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருந்த மனிதனைக் குறித்த விஷயத்தில் கொரிந்திய கிறிஸ்தவர்களை கடிந்துகொண்டு, புத்திசொல்லுகிற வேளையில், தான் அவர்களுக்கு எழுதிய முந்தைய கடிதத்தைப் பற்றி பவுல் குறிப்பிடுகிறார். வெளிப் படையாக, அவர் அதில் விவாதித்த ஒரு விஷயத்தை அவர்கள் தவறாக புரிந்துகொண்டார்கள். தற்போதைய சூழ்நிலையை அவர்கள் தவறாக புரிந்து கொண்டதினால், அப்போஸ்தலன் தன்னுடைய அறிவுரைக்கு விளக்கமளித்தார். தனது முந்தைய கடிதம் சபை தனது உறுப்பினர்களிடையே ஒழுக்கக்கேட்டை சகித்துக் கொள்ளக்கூடாது என்ற தற்போதைய கட்டளையுடன் ஒத்துப் போகிறது என்று பவுல் வலியுறுத்தினார்.

**9விபசாரக்காரரோடே கலந்திருக்கக்கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன். 10ஆனாலும், இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர், பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர், இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக் கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தைவிட்டு நீங்கிப் போக வேண்டியதாயிருக்குமே. 11நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது; அப்படிப்பட்டவனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது. 12புறம்பே இருக்கிறவர்களைக் குறித்துத் தீர்ப்புச் செய்கிறது என் காரியமா? உள்ளே இருக்கிறவர்களைக் குறித்தல்லவோ நீங்கள் தீர்ப்புச் செய்கிறீர்கள்? 13புறம்பே இருக்கிற வர்களைக் குறித்துத் தேவனே தீர்ப்புச்செய்வார், ஆகையால் அந்தப் பொல்லாதவனை உங்களை விட்டுத் தள்ளிப் போடுங்கள்.**

**வசனம் 9.** பவுல் குறிப்பிட்ட முந்தைய கடிதம் புதிய ஏற்பாட்டில் நமக்கு பாதுகாக்கப்படவில்லை. இக்கடிதத்தைப்பற்றி இங்கு சொல்லப்பட்ட குறிப்பைத் தவிர கூடுதலான விவரங்கள் எதுவும் கிறிஸ்தவர்களுக்கு தெரியாது. உத்தேசமாக, எபேசுவிலிருந்து பவுல் இதை எழுதினார். அப்படியானால், நாம் “1 கொரிந்தியர்” என்று அழைக்கும் கடிதம் ஒரு வருடம் அல்லது அதற்கு மேலாக பவுல் எபேசுவில் இருந்தபோது எழுதப்பட்டிருக்கலாம். முந்தைய கடிதத்தில், கொரிந்திய கிறிஸ்தவர்கள் பாலியல் ஒழுக்கக்கேட்டில் ஈடுபட

வேண்டாம் என்று வலியுறுத்தினர்; அதாவது, அத்தகைய நடத்தையை எளிதாக எடுக்க வேண்டாம் என்று பொருள். பாவத்தை அவர்கள் அற்பமான காரியமாக கருதக் கூடாது. முந்தைய மற்றும் 1 கொரிந்தியர் கடிதத்திலும் பவுல் ராஜ்ஜியத்தின் எல்லைகளைக் குறித்து அக்கறை கொண்டிருந்தார். சபை அதன் ஐக்கியத்தை நீட்டிக்கும் போது, மறைமுகமாக அதன் ஒப்புதலை தருகிறது, மட்டுமல்லாமல் அதை ஏற்றுக் கொள்ளுகிறது. சபை கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது. சபை எவைகளையெல்லாம் அங்கீகரிக்கிறதோ அது கிறிஸ்து அங்கீகரிப்பதைப்போன்றது. விசுவாச அறிக்கை யினாலும் சபையின் வாழ்க்கை முறையினாலும் அதன் எல்லைகள் வரையறுக்கப்படுகின்றன. விசுவாசிகள் ஒழுக்கக்கேடான மக்களுடன் சுதந்திரமாக இணைந்திருக்கும் போது, சில சமயங்களில் அந்தக் குழு இனி கிறிஸ்துவுக்குரிய சபை அல்ல.

முந்தைய கடிதத்தைப் பற்றிய அப்போஸ்தலரின் குறிப்பு ஏவுதல் மற்றும் நியதிகளை குறித்த கேள்விகளை எழுப்புகிறது. பவுல் எழுதியவைகளெல்லாம் பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டதா? ஏன் பவுலின் சில கடிதங்கள் மட்டுமே புதிய ஏற்பாட்டில் சேர்க்கப் பட்டுள்ளன, எல்லா கடிதங்களும் அல்ல? ஒருவராலும் எல்லா கேள்விகளுக்கும் உறுதியான பதில்களை தர இயலாவிட்டாலும், சில உண்மைகள் தெளிவாக உள்ளன: (1) பேதுரு, பவுல், லூக்கா, யோவான், மற்றும் பிற புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் எழுதி யவைகள் எல்லாம் வேதவசனங்களாக அங்கீகரிக்கப்படவில்லை. (2) கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களையும் ஏவுதல் பெற்ற மற்ற மனிதர்களையும் அவர்கள் பேசிய எழுதிய வார்த்தைகளிலும் பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தினார். பவுல் தனது முந்தைய கடிதத்தைப் பற்றி குறிப்பிட்டார் ஏனெனில் அது இக்கடிதத்தைப் போலவே அதிகாரப்பூர்வமானதாக இருந்தது. (3) புதிய ஏற்பாட்டின் உருவாக்கத்தில் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல், அவருடைய சித்தப்படி மற்ற படைப்புகள் சேர்க்கப்பட்டது வரையிலும் நீடித்தது. கிறிஸ்தவர்களின் விசுவாசம் என்னவெனில் புதிய ஏற்பாட்டை உருவாக்கும் பல்வேறு ஆவணங்களை ஆவியானவர் ஏவினது மட்டுமல்லாமல், சபையிலும் சபை மூலமாகவும் இந்த ஆவணங்கள் பாதுகாக்கப்படும்படியாகவும் பிற்கால விசுவாசிகள் பயன் படுத்தும்படியாகவும் ஆவியானவர் ஏவினார். (4) நியதி மூடப்பட்டது. இன்று ஒரு ஆவணம் கண்டெடுக்கப்பட்டு அது பவுல் அல்லது யோவான் எழுதினது என அடையாளம் கண்டாலும், அதை புதிய ஏற்பாட்டில் ஒரு பகுதியாக சேர்க்க முடியாது. பரிசுத்த ஆவியானவர் ஏற்கெனவே நியதியை வரையறுக்கும் கிரியையை செய்து முடித்தார்.

**வசனம் 10.** ஒழுக்கத்தூய்மைக்கான அழைப்பு என்பது உலகம் முழுவதிலுமிருந்து பிரிக்கப்படுவதற்கான ஒரு அழைப்பாக

விளக்கப்பட்டுள்ளது. அநேகமாய் நடைமுறை வாழ்க்கைக்கு சாத்தியமற்ற ஒரு அணுகுமுறையை பவுல் எதிர்பார்த்தார் என்பதற்கு அவருடைய அறிவுரைகளே சான்று என்று பவுலின் எதிரிகள் முறையீடு செய்தனர். அப்போஸ்தலர் தன்னுடைய கட்டளையை 5:9-13ல் தெளிவு படுத்தினார்.

ஒரு கிறிஸ்தவர் இந்த உலகில் ஒழுக்கக்கேடுள்ள அனைத்து மக்களுடனான தொடர்பை தவிர்க்க முடியாது. அத்தகைய தவிர்ப்பு என்பது **அவர்கள் உலகத்தை விட்டு** வெளியே வர வேண்டும் என்று கூறினார். இருப்பினும், கிறிஸ்தவர்கள் தாங்கள் பாராட்டுகிற விதமான நடத்தையைக் குறித்து சொல்வதற்குண்டு, அல்லது குறைந்த பட்சம் சகித்துக்கொள்ளுகிற, கர்த்தருடைய சரீரத்திற்குள் சகிப்புத்தன்மையைப் பற்றி ஏதாவது சொல்ல வேண்டும். மற்ற பாவங்களை விட பாலியல் ஒழுக்கக்கேடானது வித்தியாசமான மற்றொரு வரிசையில் இருப்பதாக அவரது வாசகர்கள் நினைக்கக்கூடாது அவர் கருதினார், ஆகையால் அப்போஸ்தலர் பட்டியலை நீட்டி **பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிர காரதனைக்காரர்** போன்றவர்களையும் விபச்சாரக்காரரோடு சேர்க்கிறார். அவர் விவரிக்கின்ற பாவங்கள், தந்தையின் மனைவி யுடன் வாழ்ந்து கொண்டிருந்த மனிதனுடைய பாவத்துடன் நேரடி தொடர்பு இல்லை.

காலங்கள்தோறும் ஒரு தொடர்ச்சியான குரல் வாதிட்டது என்னவெனில், கிறிஸ்தவர்கள் தங்கள் பரிசுத்தத்தை காத்துக் கொள்ள உலகத்திற்கு தங்களை மூடி தனிமைப்படுத்தப்பட்ட துறவற மடங்களில் வாழ்தல் அவசியம் என்றனர். அக்கருத்தின் பிரதி பலிப்பே துறவிமடங்களும் கன்னிமடங்களும் எனலாம். பிரிந்து செல்வதை விட கடினமான ஒரு வேலையை இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு கொடுத்தார். உலகத்திற்குள்ளே புறப்பட்டுச்சென்று பாவத்தைக் குறித்து போதிக்கும்படி கட்டளையிட்டார், தங்களுடைய பரிசுத்தத்தை காத்துக்கொண்டு தங்களுடைய விசுவாசத்தினாலும் நற்குணங்களினாலும் அவர்களுடைய வாழ்வில் பாதிப்பு ஏற்படுத்தும்படி கற்பித்தார். சுவர்களுக்கு பின்னே மறைந்து உலகத்திலிருந்து சபை தன்னை தனிமைப்படுத்துவதில்லை. தேவனுடைய சபைக்கு விரோதமான பாதாளத்தின் வாசல்களுக்கு அரணாக விளங்குவது சபை ஆகும் (மத். 16:18). கிறிஸ்தவர்கள் தேவனை அறியாதவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள வழி தேடக்கூடாது; பாவத்திற்கு அடிமைப் பட்டவர்களை நாம் எதிர் கொண்டு அவர்களை இரட்சிப்பின் வாழ்விற்கு வழி நடத்த வேண்டும்.

**வசனம் 11.** தன்னுடைய முந்தைய கடிதத்தில், உலகத்தாரோடு தேவையான தொடர்பு பற்றி விசுவாசிகளுக்கு பவுல் அறிவுறுத்தவில்லை. ஆனால் இயேசு தன்னுடைய போதனையில்

அதைப்பற்றி குறிப்பிட்டார்: அவர்கள் வசிக்கிற பகுதியிலே, அவருடைய சீஷர்கள் குருடருக்கு வெளிச்சமாயிருக்கும்படியாக அழைக்கப்பட்டார்கள், மலையின்மேல் இருக்கிற பட்டணம்போல (மத். 5:14). பவுலின் முந்தைய கடிதம் அவிசுவாசிகளைப்பற்றி எதுவும் சொல்லவில்லை. பதிலாக, கொரிந்திய கிறிஸ்தவர்கள் எந்த ஒரு சகோதரனும் ஒரு ஒழுக்கக்கேடான நபராக இருந்தால் அவருடன் தொடர்பு கொள்ளக் கூடாது என்று அவர் அறி வுறுத்தினார். அவர் முன்பு செய்தது போல், **பொருளாசைக்காரர், விக்கிரகாராதனைக்காரர், உதாசீனர், மதுபானபிரியர், மற்றும் கொள்ளைக்காரர்** போன்ற அனைவரும் ஒழுக்கக்கேடானவர்கள் என்று பட்டியலிட்டார். விசுவாசமுள்ள ஒரு கிறிஸ்தவர் இந்த பாவங்களுக்கு உட்பட்ட "சகோதரன்" உடன் சாப்பிடக் கூட அனுமதி இல்லை.

இயேசுவின் எதிரிகள் அவருக்கு விரோதமாக கொண்டு வந்த குற்றச்சாட்டுகளைப் பற்றி பவுலின் போதனை கேள்விகளை எழுப்புகிறது. பரிசேயர்கள் சீஷர்களிடம் கேட்டார்கள், "உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிற தென்ன?" (மத். 9:11). கொரிந்துவிலிருந்த சகோதரர்களில் சிலர் கிறிஸ்தவர்களானபோது ஒழுக்கக்கேட்டிலிருந்து திரும்பினது போல, இயேசுவோடு மேசையில் உட்கார்ந்திருந்த பாவிகளும் தேவனுடைய மக்களாக ஆகலாம் அல்லவா? அவர்களுடைய வாழ்க்கை முறையை இயேசு ஊக்கப்படுத்தினாரா? கிறிஸ்தவர் ஒருவர் தன்னை விசுவாசி என அழைத்தும் வெளிப்படையாக தேவனுடைய சித்தத்தை புறக்கணித்து வாழ்கிற ஒருவருடன் சமுதாயத்தில் தன்னை இணைத்துக் கொள்வது சரியானதா அல்லது தவறானதா? தேவனுடைய அன்பின் செய்தியைக் கொண்டு பாவிகளை மனந்திரும்ப அழைப்பதே ஒருவரின் நோக்கம் எனில், "அத்தகையவருடன் சாப்பிடுவது" தேவ மகிமைக்காக இருக்கும். இருப்பினும், சிலவேளைகளில், பாவத்தில் வாழும் ஒரு நபருடன் உணவருந்துவதினால் பாவியினுடைய நடத்தையை அவர் மன்னித்து விடுகிறார். குறைந்தபட்சம், அது அவிசுவாசிகளை குறித்த தவறான எண்ணத்தை எடுத்துப்போடுகிறது. மற்றபடி கிறிஸ்துவின் நற்செய்தியால் சந்திக்கப்படுகிறவர்கள் சபையானது பரிசுத்த வாழ்வைப் பற்றி தீவிரமாக பேசுகிறதே அன்றி, அத்தகைய பரிசுத்தத்தை வாழ்க்கையில் கடைப்பிடிக்கவில்லை என்று குற்றப் படுத்த ஏதுவாயிருக்கிறது.

**வசனம் 12.** கொரிந்து சபை அறிந்துகொள்ள வேண்டும் என்று பவுல் விரும்பியது என்னவெனில் கிறிஸ்துவுக்கு வெளியில் இருக்கும் ஒரு நபர் இயேசுவே கிறிஸ்து, தேவகுமாரன் என்று விசு வாசித்து; தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, அவருக்குள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். பேச்சுத் திறமையுடன், அப்போஸ்தலர் கேட்டார், **புறம்பே இருக் கிறவர்களைக் குறித்துத்**

***தீர்ப்பு செய்கிறது என் காரியமா?*** அவிசுவாசியின் தனிப்பட்ட பாவங்களை குறித்து நியாயத்தீர்ப்பது கிறிஸ்தவர் ஒருவரின் காரியம் அல்ல. பொருளாசை அல்லது மதுபான பழக்கம் உடைய ஒரு அவிசுவாசியை தாக்குவதற்கு பதிலாக, நீதிமான் ஒருவருமில்லை என்ற உண்மையை அவர் நம்பும்படி செய்யும் பொறுப்பு கிறிஸ்தவருக்கு உண்டு. கிறிஸ்துவின் சிலுவையிலிருந்து வெளிப்பட்ட பாவமன்னிப்பும் கிருபையும் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையாக இருக்கிறது. கர்த்தர் அனைத்துப் பாவிகளையும் மீட்பின் மேஜைக்கு அழைக்கிறார்.

கிறிஸ்தவன் ஒருவன் **உள்ளே இருக்கிறவர்களைக் குறித்து தீர்ப்புச்செய்வது மற்றொரு விஷயம்**. அத்தகைய தீர்ப்புகள் தேவையானது. கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் பாவங்களைக் கண்டுபிடிப்பதற்காக தூண்டுவது அல்லது வேவு பார்ப்பது மன்னிக்க முடியாத ஒன்று. மற்றவர்களின் நோக்கங்களின் மீது தீர்ப்பு வழங்குவதற்கான உரிமையும் எங்களுக்கு வழங்கப் படவில்லை (மத். 7:1, 2; யாக். 4:11). இருப்பினும், ஒரு அங்கத்தினர் வெளிப்படையான மனந்திருந்தாத பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது, கிறிஸ்தவர்கள் அந்த பாவ நடக்கையை கண்டிக்க வேண்டியது அவசியம். “மற்றவர்களை அக்கினியிலிருந்து இழுத்து விட்டு இரட்சிக்க ...” விசுவாசிகளை யூதா உற்சாகப் படுத்துகிறார் (யூதா 23).

**வசனம் 13.** கிறிஸ்துவை அவிசுவாசிகளுக்கு அறிவித்து கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிய அவர்களை ஊக்குவித்த பின்பு, கிறிஸ்தவர்கள் தங்கள் நியாயத்தீர்ப்பை தேவனுடைய கரங்களில் விட்டு விட வேண்டும். இதற்கிடையில், தேவனுக்கு விரோதமான வெளிப்படையான பகையோடு வாழும் அங்கத்தினரை சபையானது தங்களை விட்டு விலக்கி வைக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் உபாகமம் 17:7ஐ 1 கொரிந்தியர் 5:13ல்: அந்த **பொல்லாதவனை உங்களை விட்டு தள்ளிப்போடுங்கள்** என்று மேற்கோள் காட்டி இக்கருத்தை வலியுறுத்துகிறார்.

இந்த விஷயத்தில் பவுலின் வழிகாட்டுதலை பின்பற்றுவது கடினம், ஏனெனில் சபையானது அதன் அங்கத்தினர்களை வளர்க்கவும் ஊக்குவிக்கவும் வேண்டும், பாவிகள் மனந்திரும்பும் போது அவர்களை மன்னிக்க வேண்டும், அவர்களை தயவாகவும் இரக்கத்துடனும் நடத்த வேண்டும். தயவையும் இரக்கத்தையும் ஒரு போதும் ஒதுக்கிவைக்க முடியாது; முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர் ஒருவர் தேவனுக்கு விரோதமான பகையில் வெளிப்படையாக தொடர்ந்து நீடித்திருந்தால், சபையானது அத்தகைய நடத்தையை ஏற்றுக்கொள்ள முடியாது. கடினமானதாகவும் ஆபத்தானதாகவும் இருந்தாலும், சபையானது தன்னிடத்திலிருந்து வழி விலகிச் சென்ற அங்கத்தினரை ஒழுங்கு படுத்தவேண்டியது அவசியமான ஒன்று.

## நடைமுறை பயன்பாடு

### தெளிவான தகவல் தொடர்புக்கான அழைப்பு

அறிவுரைகள் எப்போதும் தெளிவாக இருப்பது இல்லை. ஒரு குழந்தையின் தண்ணீர் புட்டியில் இருந்த விவரச்சீட்டில் இப்படி எழுதப்பட்டிருந்தது, “புட்டியில் இருக்கும் தண்ணீரை குழந்தை குடித்து தீர்க்கும்போது, புட்டியை குழந்தையிடம் வாங்கி அதை எடுத்து கொட்டி ஓடும் தண்ணீர் கீழ் வைக்க வேண்டும். குழந்தை பசும்பாலை அப்படியே குடிக்கவில்லையெனில் அதை கொதிக்க வைக்க வேண்டும்.” “அது” என்னும் பிரதி பெயர்ச்சொல்லின் மேல் ஆசிரியரின் ஜாக்கிரதையான கவனத்தினால் சிறப்பான தெளிவை (மற்றும் குறைவான சங்கடம்) அடைந்திருக்க முடியும்.

அப்போஸ்தலனாகிய பவுலும்கூட சில சமயங்களில் தெளிவை குறித்த பிரச்சினைகள் சந்தித்திருக்கிறார் என்று ஒருசிலர் வஞ்சகமான ஆறுதலடைந்ததை கவனித்திருக்கலாம். ஒழுக்கக் கேடான மக்களுடன் ஐக்கியம் கொள்ளக் கூடாது என்று கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு பவுல் கொடுத்த அறிவுரை தெளிவாக இல்லை (5:9). நல்ல காரணத்தோடு, கொரிந்தியர்கள் என்ன செய்ய வேண்டுமென்று அவர்களுக்கு தெளிவு படுத்த அவர்கள் அவரை அனுமதிக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார். புறஜாதிகளுக்கான அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்தவர்கள் பொறுமையாய் இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ள வேண்டியிருந்தால், மிகுந்த கவனம் செலுத்துங்கள், அவர் மறுபடியும் அதை விளக்கிச் சொல்லலாம். மூப்பர்கள் மற்றும் பிரசங்கிகளுக்கு அதே கிருபையை அளிக்கும்படி இன்றைய கிறிஸ்தவர்கள் நன்மையானவைகளைச் செய்ய வேண்டும். பெரும்பாலான மக்கள், ஒரு நேரத்தில் அல்லது மற்றொரு நேரத்தில், தகவல்களை தெளிவாகத் தெரிவிக்க தவறிவிடுகிறார்கள்.

### பாவத்தை கையாளுதல்

சபைகளில் சிலர் தங்கள் உறுப்பினர்களிடம் ஏதாவது ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்காவிட்டால், சபை என்பது பொதுவான விசுவாச அறிக்கையும் பொதுவான வாழ்க்கை முறைக்கான அர்ப்பணிப்பையும் உடைய மக்களால் வரையறுக்கப்பட்டதாக இருக்க முடியாது. கொரிந்து சபையினர் வெளிப்படையாக பாவத்தில் வாழ்ந்த தங்களில் ஒருவரை பொறுத்துக் கொள்வதினால், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் பரிசுத்தத்தை அவர்கள் சமரசப்படுத்தினார்கள். கிறிஸ்தவ சமுதாயம் எதிர் கொள்ள வேண்டிய கடினமான காரியங்களில் ஒன்று சபையின் ஒழுக்கநெறிகளை முறைப்படுத்துவது ஆகும். இரண்டு வகையான சபைகள் உண்டு: (1) ஒரு சகோதரர் அல்லது சகோதரியை ஒருபோதும் சந்தித்து மனந்திரும்புதலையும்

மாற்றத்தையும் வலியுறுத்தாத சபை. (2) தங்களில் ஒருவரை ஒழுங்குபடுத்தியதன் மூலம் குற்றம் சாட்டப்பட்டவர்களின் கூட்டம். சபை ஒழுங்கு முறைகளை அமல்படுத்துவதில் சிக்கல்கள் இல்லாமல் இல்லை.

*ஒழுங்குமுறைகளை தொடர்ந்து செயல் படுத்துவது பலனுள்ளதாக இருக்கும்.* மனைவியை அடிக்கும் ஒரு கணவனுடன் சபை ஐக்கியத்தை பராமரிக்கிறபோது, சபை ஆராதனைகளுக்கு ஒழுங்காக பங்கு பெறாத ஒருவருக்கு சபை ஐக்கியத்தை மறுப்பது அர்த்தமற்ற ஒன்று. திருட்டுத்தனம் பொருளாசையைவிட மோசமான பாவமா? பொய்யனுக்கு ஐக்கியம் மறுக்கப்படும்போது வதந்திகளை பரப்புகிறவனை வரவேற்பது முறையானதா? எல்லா கிறிஸ்தவர்களும் தங்கள் வாழ்க்கையில் பாவம் செய்கிறார்கள். "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்று பவுல் எழுதுகிறார் (ரோமர் 3:10). சபை மக்களும் கிறிஸ்தவ தலைவர்களும் ஒழுக்கம் சம்பந்தப்பட்டவைகளுடன் போராடுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை!

*சரியான வழிமுறைகளின் படி ஒழுக்க நெறிகளை அமல்படுத்த வேண்டும்.* தன்னுடைய தந்தையின் மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருந்த வரை குறித்து பவுல் கொடுத்த அறிவுரைகள் ஒழுக்கக்கேடுக்கான பயனுள்ள வழிகாட்டுதல்களை தருகிறது. முத லாவதாக, அம்மனிதனின் பாவம் பகிரங்கமாக அறியப்பட்டது. எல்லா பாவங்களும் பரவலாக அறியப்படுவதில்லை. ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி எல்லாரும் பார்க்கும்படி பாவம் செய்தால் சபை பகிரங்கமாக ஒழுங்கு நடவடிக்கையை மேற் கொள்ள வேண்டும். பகிரங்கமான பாவத்திற்கு பகிரங்கமான நட வடிக்கை தேவைப்படுகிறது.

இரண்டாவதாக, அம்மனிதனின் பாவம் கிறிஸ்தவர் களல்லாதவர்கள் முன்பாக சபைக்கு காணப்பட்ட நற்பெயரைத் தகர்த்தது. இது விசுவாசத்தின் எதிர்பார்ப்புகளை அற்பத்தனமாகக் காட்டியது. எதிர் மறையாகச் சொன்னால், அம்மனிதனின் பாவம் மோசமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்த்தை அல்ல, இன்னும் சொல்லப்போனால் வேதத்தை வாசிக்க தவறியதாலோ அல்லது ஜெபிக்க தவறியதாலோ ஏற்பட்டது அல்ல. தேவபக்தியற்றவர்களே கண்டிக்கிற பாவம் இது. மூன்றாவதாக, தன்னுடைய நடத்தை கர்த்தருடைய சித்தத்திற்கு மாறானது என்று அவர் நன்கு அறிந்திருந்தார். அவர் தனது பாவத்தை உணர்ந்தார். நான்காவது, அம்மனிதன் மறைமுகமாக கிறிஸ்தவர்களால் தனிப்பட்ட விதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தார் (மத். 18:15-17). ஐந்தாவது, ஒழுக்கத்தின் இரண்டு நோக்கங்கள் என்னவெனில் ஒன்று புற ஜாதியார்களுக்கு முன்பாக சபையின் நற்பெயரைக் காப்பாற்றுவதாகும் (1 கொரி. 5:1), மற்றொன்று பாவியின் ஆத்துமாவை பாவச் செயல்களில் இருந்து

காப்பாற்றுவது (5:5). ஒழுக்க நெறிக்கான நோக்கம் தனிப்பட்ட கோபமோ, பழி வாங்குதலோ, அல்லது குற்றவாளியை தண்டிப்பதோ அல்ல.

---

குறிப்புகள்

[1]Ben Witherington III, *Conflict and Community in Corinth: A Socio-Rhetorical Commentary on 1 and 2 Corinthians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1995), 156. [2]Friedrich Hauck and Siegfried Schulz, "πόρνη, πόρνος, πορνεία, πορνεύω, ἐκπορνεύω," in *Theological Dictionary of the New Testament*, ed. Gerhard Kittel, trans. and ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971), 6:587. [3]Francis Schaeffer, *The God Who Is There* (London: Hodder and Stoughton, 1968), 155. [4]Apuleius'கதை *Metamorphoses* (சிறந்த கோல்டன் ஆஸ் என அழைக்கப்படுகிறது, அதன் முழுமையான பிழைத்திருக்க லத்தீன் ஒரே பண்டைய ரோமன் நாவல்) ஒரு உதாரணம் ஆகும். அப்பல்லியம் ஒரு பணக்கார வடக்கு ஆப்பிரிக்க குடும்பத்தில் இருந்து வந்தவர். அவர் லத்தீன் மொழியில் எழுதினார், ஆனால் இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்த கிரேக்க அமைப்பில் அவரது கதையை அளித்தார்.